
# துறைநீலாவணை கண்ணகை அம்மன் ஊர்வலக் கும்மி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னுரை

கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாம் கண்ணகையம்மன் மெய்யடியார்களே! நான் புலவனுமில்லை, கவிஞனுமில்லை கல்வியைக் கற்றுணர்ந்தவனுமில்லை இருந்தும் அன்னையின் அருளால் சிறு சிறு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளேன். அவற்றுள் 9வது வெளியீடாக துறைநீலாவணை கண்ணகையம்மன் திருவுளம் இரங்கியதால் கண்ணகையம்மன் ஊர்வலக்கும்மி என்னும் சிறு ஆக்கத்தை மலரவிடுகின்றேன் இதில் ஏதும் குற்றம் குறைகள் இருப்பின் கற்றுணர்ந்த பெரியோர்கள் மன்னித்தருள வேண்டுமென்று மனமாரப் பணிகின்றேன்.


**இங்ஙனம்**
**வைரமுத்து-கணேசன்**
**கலைமகள் வீதி**
**சேனைக்குடியிருப்பு-02**
**கல்முனை.**
**16.05.2008**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைநீலாவணை கண்ணகை அம்மன் ஊர்வலக் கும்மி

நல்ல தமிழக்கவி தந்தருளும்-எங்கள்
நாதா கணநாதா மூத்தவனே
தில்லை யம்பலப் பிள்ளையாரே-உந்தன்
திருவடி என்றும் காப்பாமே.

கையில் வீணையை ஏந்திக்கொண்டு-வெள்ளை
கமலமலர்மேல் வீற்றிருந்து
வையக மாந்தரின் நெஞ்சிலுறைகின்ற-வால
சரஸ்வதி வாருமம்மா.

கூரான வேல்கையில் வைத்திருக்கும்-செவ்வக்
குழந்தைவேலன் தாழ்பணிந்து
சீரான செந்தமிழ்க் கவிபாடி-நாம்
தினமும் கும்மி கொட்டிடுவோம்

காதளவோடிய கண்ணழகி-எங்கள்
கற்புக்கரசி கண்ணகையின்
ஆதரவோடு தமிழ்பாடி-இன்று
ஆனந்தக்கும்மி கொட்டிடுவோம்.

வாடா முகத்தோடு வீற்றிருக்கும்-எங்கள்
மங்கை கண்ணகை தன்பேரில்
கோடான கோடிக் கவிபாடி-நாம்
கொட்டிடுவோம் கும்மி கொட்டிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமா நகரின் தெற்கே-பெரும்
வாவிக் கரையோரம் வந்தமர்ந்து
அட்டமாசித்தி எமக்களிக்கும்-எங்கள்
அன்னை கண்ணகி தாழ்பணிவோம்.

நிறை மனதோடு வீற்றிருந்து-தினம்
நித்தம் அடியவர்க் கருள் வழங்க
துறை நீலாவணைப் பதியமர்ந்த-எங்கள்
தேவி கண்ணகைத்தாயாரே.

வீரத்திரு மக்கள் நிறைந்தமண்ணில்-அம்மன்
விரும்பி வந்து குடியமர்ந்து
ஆரத்தழுவிய பக்தர்கட்கு-நல்ல
அருள் வழங்கிட வாறாளடி.

துணியாக ஒருரைத் தேர்ந்தெடுத்து-அம்மன்
தக்கபுகழோடு வீற்றிருந்து
கனிவோடு செந்தமிழ் கூறுவோரை-அவள்
காத்திடப் பல்லக்கில் வாறாளடி

கோவலன் தன்னை மணந்தவளாம்-அன்னை
கொஞ்சநாள் வாழ்வு வாழ்ந்தவளாம்
பாவத்தைப் போக்கிட வேண்டுமென்று-அவள்
பாருலகு வந்த உத்தமியாம்.

மதுரை எரித்த பத்தினியாம்-அன்னை
மனுநீதி காத்த ரட்சகியாம்
தர்மத்தைக்காக்க வந்தவளாம்-என்று
தையலரே கும்மி கொட்டுங்கடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை நாமத்தை நெஞ்சில்வைத்துப்-பெண்ணே
ஆசையாய் ஊர்வலக் கும்மி தன்னை
பண்ணோடுபாடி அகமகிழ்ந்து-இப்போ
பாவையரே கும்மி கொட்டுங்கடி.

செந்தமிழ்க் கும்மியும் கொட்டுமடி-பெண்ணே
சென்னிமேலே கரம் கூப்புமடி
எந்த வினையையும் நீக்குமென்று-சொல்லி
எம்தாயார் நாமத்தை கூறுமடி.

வந்த வினையையும் போக்கிவைத்து-அம்மன்
வருகின்ற வல்வினை நீக்கிவைத்து
எந்தவினையும் அணுகாமல்க்-காக்க
எம்தாயார் பல்லக்கில் வாறாளடி.

வைகாசித்திங்களில் தான்வருவேன்-என்று
வாக்குமொழிந்து சென்றதுபோல்
தையலாள் கண்ணகை வந்துவிட்டாள்-என்று
தங்கையரே கும்மி கொட்டுங்கடி.

ஆற்றங்கரையோரம் வந்தமர்ந்து- அம்மன்
அருள்மழை பொழிய வேண்டுமென்று
வீற்றிருக்கிறாள் கண்ணகியும்-என்று
விரும்பிக்கும்மி கொட்டுங்கடி.

திருநீறு சந்தணம் பூசுமடி-பெண்ணே
சிகப்புக்குங்குமம் வையுமடி
பெருமனதோடு கசிந்துருகிப்-பெண்ணே
பொன்னான நல்வரம் கேழுமடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பூரச்சட்டியும் ஏந்துமடி-அம்மன்
கருணை வேண்டி உருகுமடி
அற்புதமாகவே சொற்பனத்தில்-நம்ம
அன்னையும் வருவாள் பாருமடி.

கையில் சிலம்போடு வீற்றிருந்து-அம்மன்
கருணை பொழிய வேண்டுமென்று
வையக மாந்தரின் குறையைத்தீர்த்திட-மாதா
பல்லக்கில் வாறாளடி.

வீதியில் தோரணம் கட்டிவைத்துப்-பெண்ணே
விழாக்கோலம் போலே அலங்கரித்து
சோதிவடிவான கண்ணகைத்-தாயாரே
சொந்தமென்று கும்மி கொட்டுங்கடி.

கண்ணின் மணிபோல் எமைக்காக்கும்-எங்கள்
கண்ணகை யம்மன் ஊர்வலமாய்
எண்ணம்போல் இப்போது வாறாளடி-பெண்ணே
ஏக்கத்தைச் சொல்லி முறையிடடி.

வேப்பிலைக்குள்ளே வீற்றிருந்து-அம்மன்
வேதனை போக்கிட வேண்டுமென்று
தப்பாமல் நமது இல்லவாசல்-தேடி
தாயார் வருகிறாள் பாருமடி.

குத்துவிளக்கேற்றி வையுமடி-பெண்ணே
பூரணகும்பம் வையுமடி
முத்தான தண்ணீரும் வைத்துவிட்டுப்-பெண்ணே
முத்தமிழ்க்கும்மியும் கொட்டுமடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாங்கல்யம் என்றும் தழைத்தோங்க-நம்ம
வருங்காலம் இன்னும் ஒழிவிளங்க
பூங்குயில் கண்ணகை பாதம் பணிந்து-நாம்
போற்றித் துதித்து வணங்கிடுவோம்.

வஞ்சகநெஞ்சரை வதைத்திடுவாள்- அன்னை
வாழநினைப்போரை வாழ்த்திடுவாள்
கெஞ்சியே பாதம் பணிவோரை-நித்தம்
கேடின்றி எப்போதும் காத்திடுவாள்.

எங்கும் நிறைந்த பரபரியாம்-எங்கள்
ஏந்திழை கண்ணகை தாழ்பணிந்து
அங்கம் சிலிர்க்க அகமகிழ்ந்து-பெண்ணே
அழகாய்க் கும்மி கொட்டிடுவோம்.

பல்லக்கில் அமர்ந்து பத்தினியும்-இப்போ
பக்தர்முகம் பார்க்க வேண்டுமென்று
எல்லை இல்லா இன்பம் தான்பெருகப்- பெண்ணே
எங்கள் கண்ணகை வாறாளடி.

நல்ல மனதையும் தானறிவாள்-பெண்ணே
நம்பிக்கை கொண்டோரைக் காத்திடுவாள்
எல்லையில்லாப் பக்தி எமக்கிருந்தால்- பெண்ணே
என்றுமே காத்து அருள் புரிவாள்.

பஞ்சம் பசியையும் போக்கிடுவாள்-அன்னை
பாலாறு பாயவும் செய்திடுவாள்
கெஞ்சுதல் நெஞ்சில் நமக்கிருந்தால்- பெண்ணே
கேட்டது எல்லாமே தந்திடுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் தொழிலை விருத்திசெய்வாள்- அன்னை
சேராத செல்வமும் சேர்த்திடுவாள்
வையகத்தில் தமிழ் மேலோங்கப்-பெண்ணே
வரங்கள் தந்து காத்திடுவாள்.

கல்விக்கரசியாய்த் தான்வருவாள்-அன்னை
கலைகள்யாவும் ஈந்திடுவாள்
சொல்லிலேவந்து அமர்ந்திடுவாள்-என்று
தோகையரே கும்மி கொட்டுங்கடி.

பட்டம் பதவியும் தந்திடுவாள்-அன்னை
பாரிலே வாழ்ந்திடச் செய்திடுவாள்
தொட்டது துலங்கவும் மனதுவைப்பாள்-நம்மை
துன்பம் அணுகாமல் காத்திடுவாள்.

இல்லத்தில் விளக்காய் ஒளிகொடுத்துப்-பெண்ணே
இன்பசுகம் பல தந்துவைத்து
அல்லலறுத்து அருள்புரிவாள்-என்று
ஆனந்தக்கும்மியும் கொட்டுங்கடி.

மாங்கல்யம் தழைக்கச் செய்திடுவாள்-அன்னை
மக்கள் மனக்குறை தீர்த்துவைப்பாள்
பங்கப்பழுவெல்லாம் நீக்கிவைப்பாள்-என்று
பாவையரே கும்மி கொட்டுங்கடி.

மேற்குவீதியைத் தான்தேடி-எங்கள்
மெல்லிடை கண்ணகைத் தாயாரும்
பார்க்குமிடமெல்லாம் நிறைந்திருபபேன்-என்று
பல்லக்கிலமர்ந்து வாறாளடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாக மனதை வையாமலப்-பெண்ணே
கசிந்து உருகிக் காதல்கொண்டு
எல்லோர்க்கும் நல்வாழ்வுதாருமென்று-சொல்லி
ஏந்திழையே கும்மி கொட்டுங்கடி.

பற்றெல்லாம் அவள்மேல் வையுமடி-பெண்ணே
பக்தியால் உள்ளம் உருகுமடி
சுற்றம்சுகமோடு வாழவேண்டும்-என்று
சுந்தரியே கும்மி கொட்டுங்கடி

முத்துமாரியம்மன் வீதியிலே-பெண்ணே
முத்தமிழ் நாயகி வாறாளென்று
சித்தம் மகிழ்ந்து அகம்குளிரப்-பெண்ணே
செந்தமிழ்க் கும்மி கொட்டுங்கடி

நித்தமும்மாரி பொழியவைக்கும்-எங்கள்
பித்தனார்தேவி சன்னதிக்கு
வந்து விட்டாளடி கண்ணகையும்-அவள்
வாழ்வில் குசேலம் தானறிய.

கிழக்கு வீதியைத் தான்னாடி-எங்கள்
கிளிமொழி கண்ணகை இப்போது
வழக்கம்போல் வருகிறாள் என்று சொல்லிப்-பெண்ணே
வாழ்த்தி வணங்கி வரம்பெறடி.

ஒழுக்கமுடைய மனதறிவாள-சக்தி
ஒவ்வொன்றும் தன்னாலே தானுணர்வாள்
நாழுக்கொருமுத்தி தந்திடுவாள்-அன்னை
நல்வாழ்வு என்றும் ஈந்திடுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான விதியைத் தான்தேடி- எங்கள்
   பேராசியிப்போ ஊர்வலமாய்
குரவையொலியோடு வாறாளென்று-பெண்ணே
   கூட்டமாய்க் கும்மி கொட்டுங்கடி.

அரகராவென்று சொல்லிவிட்டுப்- பெண்ணே
   அன்னையின் நாமத்தை நெஞ்சில் வைத்து
கரத்தோடு கரத்தை சேர்த்தசைத்துப்-பெண்ணே
   கன்னித்தமிழ்க் கும்மி கொட்டுங்கடி.

கண்ணகியம்மன் புகழ்வாழி-அவள்
   கருணை கொண்டோர் தான்வாழி
மண்ணிலுயிரினம் மிகவாழி-மக்கள்
   மனம்போலென்று வாழியதே.

சென்நெல் செழித்து மிகவாழி-எங்கள்
   செந்தமிழ் ஓசையும் தான்வாழி
பொன்னும் பொருளும் மிகவாழி- அன்னை
   பூங்கிளி கண்ணகை வாழியதே.


ஊரும் செழித்து மிகவாழி- மக்கள்
   உறவு ஒற்றுமை தான்வாழி
பேரும் புகழும் மிகவாழி-என்றும்
   பேதமையற்று வாழியதே.

கறவை இனங்கள் தான்வாழி- நல்ல
   கற்புள்ள மாந்தர் மிகவாழி
உறவோடு தமிழினம் தான்வாழி- என்றும்
   உலகோடு ஒற்றுமை வாழியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞ்ஞர் புலவர் மிக வாழி இன்னும்
கற்றவர் மற்றவர் தான்வாழி
காவிய நாயகி புகழ் வாழி - எம்மை
காக்கும் கண்ணகி வாழியவே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Brilliant Computers & Printers - Kalmunai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org